IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.89/2008
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 1.00 p.m.

பி.வா.சா. 1 சாட்சி சிவமுருகன் த.பெ. வெள்ளையன் சிவணான்டி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 16.02.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. பி.எம். பாண்டி எனது பட்டியான் பங்காளி என்றால் சரிதான். மேற்படியார் மறவன்குளம் கிராமத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். தவராஜன் எனது பங்காளி என்றால் கட்டமுத்தன் பங்காளி வகையறா ஆவார். ஜெயக்கொடி, சிவப்பிரகாஷ் பட்டியான் பங்காளி என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு வழக்குச் சொத்தில் உரிமையுள்ளதா என்றால் இல்லை.

2. எனது தந்தையான 1ம் பிரதிவாதி முதன்முதலாக எதிர்வழக்குரை தாக்கல் செய்தார் நான் எவ்வித எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனது தந்தை 1ம்பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ளும்படி இதுவரை குறிப்பாணை தாக்கல் செய்யவில்லை என்பதால் எனது சாட்சியத்தை சட்டப்படி ஏற்க இயலாது என்றால் சரியல்ல.

3. வாதி சர்வே எண் 252/2A யின் ஒத்தி தொகையை வாங்க மறுத்ததால் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒத்தி காலத்திற்கு பிறகும் நான் வழக்குச் சொத்தில் குடியிருந்து

வருவதால் எதிர்கால இழப்பீட்டுத்தொகை தர கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல.

4. நானும், பி.எம். பாண்டி என்பவரும், மற்ற நபர்களும் சேர்ந்து தனித்தனி வழக்கறிஞர் வைத்து கூட்டாக ஒன்று சேர்ந்து வாதியின் சொத்தை மோசடி செய்கிறோம் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் எனக்கு ஒத்திபாத்தியம்தான் உள்ளது என்றாலும்,தனிப்பட்ட உரிமையில்லை என்றாலும் சரியல்ல. சட்டப்படி தாவாச் சொத்தை வாதி வசம் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 1.15p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.17 10:08:20 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.